**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.84/2025**

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காமராஜ் | Father's Name | : | கலியபெருமாள் |
| Village | : | தளிக்கோட்டை | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 66 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 28th day of October 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தளிக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ராஜேந்திரன் என் உறவினர். 13.05.2009 ம் தேதி மாலை 6.00 மணிக்கு மேல் ராஜேந்திரன் வகையறாவிற்கும் சந்திரன் வகையறாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டது. அவர்களுக்குள் அடித்துக் கொண்டார்கள், ராஜேந்திரனுக்கு காயம் ஏற்பட்டது. அதில் எனக்கும் காயம் ஏற்பட்டது. நான் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டேன். பட்டியல் சாட்சி 4 ராஜேந்திரன் மகன்

மாரிமுத்து தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். காயம்பட்ட ராஜேந்திரன் இறந்து விட்டார். ராஜேந்திரன் மகன் வீரமணி, எங்கள் ஊரைச் சேர்ந்த பிரபாகரன் ஆகியோர் இயற்கை மரணம் அடைந்து விட்டார்கள். அடித்தவர்கள் யாரென்று எனக்கு தெரியாது, ஆஜரில் உள்ள எதிரிகள் அல்ல. அதை நாங்கள் தஞ்சை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது போலீசார் விசாரித்தபோது ராஜேந்திரன் புகார் வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை ராஜேந்திரனுடையது. போலீசார் விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.05.2009 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் ராஜேந்திரன் மகன் வீரமணி மீது தமிழன் என்பவர் இருசக்கர வாகனத்தை மோதிவிட்டதால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது எனவும் அதன் காரணமாக இரவு 9.30 மணியளவில் எங்கள் ஊர் நால் ரோடு அருகே சந்திரன், கமலசிங்கம், துரைசிங்கம், அறிஞர் துரை, தமிழன், ராஜா, முத்துக்குமார், வரதராஜன் ஆகியோர் இங்கே வாங்கடா

எவனா இருந்தாலும் பார்க்கலாம் என சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் அப்போது ராஜேந்திரன் அவர் மகன் வீரமணி, பிரபாகரன், மாரிமுத்து ஆகியோர்களுடன் என்னங்கடா சத்தம் போடுறீங்க என்று கேட்டோம் எனவும் அப்போது கமலசிங்கம் தன் கையில் வைத்திருந்த அருவாளால் இதோடு தொலைந்துபோடா என சொல்லி ராஜேந்திரன் தலையில் வெட்டினார் எனவும் தமிழன் அருவாளால் ராஜேந்திரனின் வலது கையில் வெட்டினார், துரைசிங்கம் கம்பியால் ராஜேந்திரனின் காலில் அடித்தார் எனவும் வீரமணியை அறிஞர்துரை கம்பியால் வலது தோள்பட்டையில் அடித்தார் எனவும் தடுக்க சென்ற பிரபாகரனை துரைசிங்கம், தமிழன் ஆகியோர் கம்பியால் அடித்தார்கள் எனவும் என்னை சந்திரன், ராஜா, முத்துக்குமார் ஆகியோர் கையில் வைத்திருந்த உருட்டுக் கட்டையால் மாறி மாறி அடித்தார்கள் எனவும் மாரிமுத்துவை வரதராஜன் தன் கையில் வைத்திருந்த கம்பியால் முதுகு, தொடை ஆகிய இடங்களில் அடித்தார் எனவும் கமலசிங்கம் அருவாளால் மாரிமுத்துவின் தொடையில் வெட்டினார் எனவும் பின் பாராளுமன்ற தேர்தலுக்காக போடப்பட்டிருந்த திமுக, அதிமுக, தேமுதிக ஆகிய கட்சிகளின் கொட்டகைகளை தீ வைத்து எரித்தார்கள் எனவும் பின் எதிரிகள் அனைவரும் எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களையும் இதுபோல் தீ வைத்து

எரித்துவிடுவோம் என சொல்லி ஓடிவிட்டார்கள் எனவும் காயம்பட்ட எங்களை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

13.05.2009 அன்று மாலை 6.00 மணிக்கு மேல் எவ்வித பிரச்சனையும் நடக்கவில்லை என்றால் தவறு. ஆவணத்தில் உள்ள கைரேகை ராஜேந்திரனுடையதுதான் என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.28 14:21:14 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.84/2025**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் | Father's Name | : | பெருமாள் |
| Village | : | தளிக்கோட்டை | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 28th day of October 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தளிக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் இவ்வழக்கில் காயம்பட்ட ராஜேந்திரன், வீரமணி, மாரிமுத்து ஆகியோரை எனக்கு தெரியும். அவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. ராஜேந்திரன், வீரமணி, பிரபாகரன் இறந்து விட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.05.2009 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் ராஜேந்திரன் மகன் வீரமணி மீது தமிழன் என்பவர் இருசக்கர வாகனத்தை மோதிவிட்டதால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது எனவும் அதன் காரணமாக இரவு 9.30 மணியளவில் எங்கள் ஊர் நால் ரோடு அருகே சந்திரன், கமலசிங்கம், துரைசிங்கம், அறிஞர் துரை, தமிழன், ராஜா, முத்துக்குமார், வரதராஜன் ஆகியோர் இங்கே வாங்கடா எவனா இருந்தாலும் பார்க்கலாம் என சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் அப்போது ராஜேந்திரன் அவர் மகன் வீரமணி, பிரபாகரன், மாரிமுத்து, காமராஜ் ஆகியோர் என்னங்கடா சத்தம் போடுறீங்க என்று கேட்டார்கள் எனவும் அப்போது கமலசிங்கம் தன் கையில் வைத்திருந்த அருவாளால் இதோடு தொலைந்துபோடா என சொல்லி ராஜேந்திரன் தலையில் வெட்டினார் எனவும் தமிழன் அருவாளால் ராஜேந்திரனின் வலது கையில் வெட்டினார், துரைசிங்கம் கம்பியால் ராஜேந்திரனின் காலில் அடித்தார் எனவும் வீரமணியை அறிஞர்துரை கம்பியால் வலது தோள்பட்டையில் அடித்தார் எனவும்

தடுக்க சென்ற பிரபாகரனை துரைசிங்கம், தமிழன் ஆகியோர் கம்பியால் அடித்தார்கள் எனவும் என்னை சந்திரன், ராஜா, முத்துக்குமார் ஆகியோர் கையில் வைத்திருந்த உருட்டுக் கட்டையால் மாறி மாறி அடித்தார்கள் எனவும் மாரிமுத்துவை வரதராஜன் தன் கையில் வைத்திருந்த கம்பியால் முதுகு, தொடை ஆகிய இடங்களில் அடித்தார் எனவும் கமலசிங்கம் அருவாளால் மாரிமுத்துவின் தொடையில் வெட்டினார் எனவும் பின் பாராளுமன்ற தேர்தலுக்காக போடப்பட்டிருந்த திமுக, அதிமுக, தேமுதிக ஆகிய கட்சிகளின் கொட்டகைகளை தீ வைத்து எரித்தார்கள் எனவும் பின் எதிரிகள் அனைவரும் எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களையும் இதுபோல் தீ வைத்து எரித்துவிடுவோம் என சொல்லி ஓடிவிட்டார்கள் எனவும் காயம்பட்டவர்களை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.28 14:21:29 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.84/2025**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரவணன் | Father's Name | : | சிவஞானம் |
| Village | : | தளிக்கோட்டை | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 47 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 28th day of October 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தளிக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் இவ்வழக்கில் காயம்பட்ட ராஜேந்திரன், வீரமணி, மாரிமுத்து ஆகியோரை எனக்கு தெரியும். அவர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. ராஜேந்திரன், வீரமணி, பிரபாகரன் இறந்து விட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 13.05.2009 ம் தேதி மதியம் 2.00 மணியளவில் ராஜேந்திரன் மகன் வீரமணி மீது தமிழன் என்பவர் இருசக்கர வாகனத்தை மோதிவிட்டதால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது எனவும் அதன் காரணமாக இரவு 9.30 மணியளவில் எங்கள் ஊர் நால் ரோடு அருகே சந்திரன், கமலசிங்கம், துரைசிங்கம், அறிஞர் துரை, தமிழன், ராஜா, முத்துக்குமார், வரதராஜன் ஆகியோர் இங்கே வாங்கடா எவனா இருந்தாலும் பார்க்கலாம் என சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள் அப்போது ராஜேந்திரன் அவர் மகன் வீரமணி, பிரபாகரன், மாரிமுத்து, காமராஜ் ஆகியோர் என்னங்கடா சத்தம் போடுறீங்க என்று கேட்டார்கள் எனவும் அப்போது கமலசிங்கம் தன் கையில் வைத்திருந்த அருவாளால் இதோடு தொலைந்துபோடா என சொல்லி ராஜேந்திரன் தலையில் வெட்டினார் எனவும் தமிழன் அருவாளால் ராஜேந்திரனின் வலது கையில் வெட்டினார், துரைசிங்கம் கம்பியால் ராஜேந்திரனின் காலில் அடித்தார் எனவும் வீரமணியை அறிஞர்துரை கம்பியால் வலது தோள்பட்டையில் அடித்தார் எனவும்

தடுக்க சென்ற பிரபாகரனை துரைசிங்கம், தமிழன் ஆகியோர் கம்பியால் அடித்தார்கள் எனவும் என்னை சந்திரன், ராஜா, முத்துக்குமார் ஆகியோர் கையில் வைத்திருந்த உருட்டுக் கட்டையால் மாறி மாறி அடித்தார்கள் எனவும் மாரிமுத்துவை வரதராஜன் தன் கையில் வைத்திருந்த கம்பியால் முதுகு, தொடை ஆகிய இடங்களில் அடித்தார் எனவும் கமலசிங்கம் அருவாளால் மாரிமுத்துவின் தொடையில் வெட்டினார் எனவும் பின் பாராளுமன்ற தேர்தலுக்காக போடப்பட்டிருந்த திமுக, அதிமுக, தேமுதிக ஆகிய கட்சிகளின் கொட்டகைகளை தீ வைத்து எரித்தார்கள் எனவும் பின் எதிரிகள் அனைவரும் எங்களிடம் வைத்துக்கொண்டால் உங்களையும் இதுபோல் தீ வைத்து எரித்துவிடுவோம் என சொல்லி ஓடிவிட்டார்கள் எனவும் காயம்பட்டவர்களை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.28 14:21:36 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.84/2025**

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் | Father's Name | : | சுப்பையன் |
| Village | : | தளிக்கோட்டை | Taluk | : | மன்னார்குடி |
| Calling | : | | Age | : | 53 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 28th day of October 2025.**

**(A1 to A3, A5, A6 are present. A4 died).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தளிக்கோட்டையில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கண்ணையன் மகன் ஜெயசேகர் சிங்கப்பூரில் இருக்கிறார். கடந்த 14.05.2009 ம் தேதி நானும் ஜெயசேகரும் தளிக்கோட்டை நடுத்தெருவில் உள்ள நால்ரோட்டில் நின்று கொண்டிருந்தபோது முதல்நாள் இரவு நடந்த சம்பவம் தொடர்பாக வடுவூர் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் நான் முதல்

சாட்சியாகவும் ஜெயசேகர் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.1**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.ஆ.1ல் நான் வடுவூர் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது, போலீசாரும் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.10.28 14:21:43 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.